1994 மார்ச் 29]

அந்த தார்ச் சாலையை நல்ல முறையிலே பயன்படுத்தி பேருந்துகள் விடுவதற்கு அதற்கு பாலத்தையும் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அதைச் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்றபொழுது, இந்தச் சாலை போடப்படாததற்கு முன்பாக எழுப்பப்பட்ட கேள்வி என்று சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசை நாடுவதற்கு முன்பாகவே, ஆங்காங்கே பணிகள் குறித்த காலத்திலே குறித்த சமயத்திலே செய்யப்படுவதற்கு இது ஓர் உதாரணம். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்வுகள்தான் இன்றைக்கு தமிழகம் முழுவதுமே நடந்து கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய இந்தப் பாலம் சாலையின் குறுக்கே ஓடைகள் குறுக்கிடுவதாலும், ஓடைகளின் இரண்டு பக்கங்களிலும் சரிவு செங்குத்தாக உள்ளதைச். சரி செய்து மேம்பாடு செய்ய இருக்கின்ற காரணத்தாலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற பணியை ஆய்வு செய்து எந்த அளவிற்கு அதைச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 140, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

140—

காவேரிப்பட்டணம் மற்றும் பாரூரில் பிற்பட்டோர் மாணவர் விடுதி துவங்குதல்.

***24828*—திரு. கா. பூ. முனுசாமி:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டணம் மற்றும் பாரூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பிற்பட்டோர் மாணவர் விடுதி துவங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரிப்பட்டணம் மற்றும் பாரூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பிற்பட்டோர் மாணவர் விடுதி திறக்க தற்சமயம் வாய்ப்பில்லை.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டணம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பொது விடுதி ஒன்று

கடந்த 1953-லிருந்து இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அதற்கு மேலும் ஒரு பொதுவான இடம், அரசு புறம் போக்கு நிலம் ஒன்று உள்ளது. அந்த நிலத்திலே வருகின்ற நிதியாண்டிலாவது பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக விடுதி கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாணவியர்க்கு மட்டும் புதிய விடுதி திறப்பது மற்றும் விடுதிக் கட்டிடம் கட்டுவது என அரசின் கொள்கையாக இருப்பதால் மாணவர் விடுதி இப்போது புதிதாகத் திறக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.15

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவியருக்கு மட்டும் விடுதி கட்டப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அதைப்போல காவேரிப்பட்டணம் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு இந்த நிதியாண்டில் விடுதி கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டணத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் பள்ளி மாணவியர் விடுதி ஒன்று இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1. திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

1. திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை தொடங்குதல்.

***34044*—திரு. எம். கே. சுந்தரம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை துவங்கிட அரசுத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், தற்பொழுது அச்செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.